# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2018 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க,*
## பிரதேச சபைகள் (திருத்தச்) சட்டம்

---

*(2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2018*, செத்தெம்பர் மாதம் *28* ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *8.00*** **தபாற் செலவு : ரூபா *15.00***

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2018 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க,**
**பிரதேச சபைகள் (திருத்தச்) சட்டம்**

[2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ- ஓ 3/2016

**1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, பிரதேச சபைகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) (xiv) என்னும் பந்தியில், "கிராம வேலைகளை நிருமாணிப்பதிலும் மாற்றுவதிலும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கிராம வேலைகளை அல்லது தோட்டக் குடியிருப்புகளை நிருமாணிப்பதிலும் மாற்றுவதிலும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) (xxii) என்னும் பந்தியில், "தேர்ந்தெடுத்த கிராமங்களின் ஒருங்கிணைந்த அபிவிருத்தியிலும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தேர்ந்தெடுத்த கிராமங்கள், தோட்டக் குடியிருப்புகள் என்பவற்றின் ஒருங்கிணைந்த அபிவிருத்தியிலும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவு, இத்தால் பின்வரு மாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவை, அதன் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும், மீள இலக்கமிடப்பட்ட (1)ஆம் உட்பிரிவில், "ஒப்பந்தத்தைச் செய்யலாம்;

என்னும் சொற்களிலிருந்து அவ்வுட்பிரிவின் முடிவு வரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

“ஒப்பந்தத்தைச் செய்யலாம்.”;

(2) உட்பிரிவு (1) ஐ மீள இலக்கமிட்டதன் உடனடுத்துப் பின்னர், பின்வரும் உட்பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலமும்:-

“(2) பெருந்தோட்டப் பிராந்தியங்களின் விடயத்தில், பிரதேச சபைகள் விசேட தீர்மானமொன்றை சேர்த்துக் கொண்டதன் மேல் அத்துடன் இயைபான தோட்டத்தின் நிருவாக அதிகாரிகளுடனான கலந்தாலோசனையுடனும், அந்தந்த பெருந்தோட்ட பிராந்தியங்களில் வதிவோரின் சேமநலனுக்கென அவசியமான வீதிகள், கிணறுகள் மற்றும் வேறு பொது வாழ்வசதிகளை அத்தகைய வதிவோருக்கு வசதியளிப்பதற்கு பிரதேச சபை நிதியத்தை பயன்படுத்தலாம்.

(3) (அ) உட்பிரிவு (1) அல்லது (2) இன் கீழ் நிர்மாணிக்கப்பட்ட, பேணப்பட்ட அல்லது வசதிப்படுத்தப்பட்ட வீதிகளும், கிணறுகளும், பொது வாழ்வசதிகளும், தோதானவொரு சாசனத்தின் மூலம் பிரதேச சபைக்குரித்தாக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் பொது வீதிகளாகவும், கிணறுகளாகவும், பொது வாழ்வசதிகளாகவும் அமைத்துருவாக்கப்படுதலும் வேண்டும்.

(ஆ) பிரதேச சபையானது, விடயத்துக்கேற்ப, தோட்டங்களின் அல்லது கைத்தொழில் முயற்சிகளின் சொந்தக்காரர்களை, இயைபான தோட்டங்களின் நிருவாக அதிகாரிகளை அல்லது அத்தகைய பெருந்தோட்டப் பிராந்தியங்களில் வதிவோரை, பிரதேசசபையினால் அங்கீகரிக்கப்படக் கூடியவாறாக அத்தகைய வீதிகளின், கிணறுகளின் மற்றும் பொது வாழ்வசதிகளின்

நிர்மாணம், பேணுகை அல்லது வசதிப்படுத்துகைக்கான செலவுகள் தொடர்பில் அத்தகைய உதவுதொகையைச் செலுத்தும்படி தேவைப்படுத்துதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய எல்லா உதவுதொகைகளும் நன்மை பெறுகின்ற அத்தகைய காணிகள் மற்றும் பெருந்தோட்டப் பிராந்தியங்களின் மீது விதிக்கப்பட்ட விசேட வீதவரிகளாகக் கருதப்படுதலும் வேண்டும்; அத்துடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் விதிக்கப்பட்டவொரு வீத வரியாக அவை அறவிடப்படற்பாலனவாதலும் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கத்திற்காக, "பெருந்தோட்டப் பிராந்தியங்கள்" என்பது, வதிவுள்ள தொழிலாளர்கள் வதியும் அத்துடன் தேயிலை, இறப்பர், தென்னை, கறுவா, மிளகு, கராம்பு அல்லது எண்ணெய்கொள்மரம் ஆகியன பயிர் செய்யப்படும் மத்திய, ஊவா, சப்பிரகமுவ, தெற்கு, மேற்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களின் மாவட்டங்களிலுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளின் கீழ்வரும் தோட்டங்கள் எனப் பொருள்படும்.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை “பிரகாசன பியச”, அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*